For Private Circulation Only

மார்ச் 2011 மலர் 4 இதழ் 2

India ECHOES ONE WORLD ONE HUMANITY

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

## சென்னையில் பொங்கல் கொண்டாட்டம்





பொங்கல் நாட்களின்போது, மணப்பாக்கத்தில் இருக்கும் ஆசிரமம், வெளியூர்களிலிருந்து வந்திருந்த அப்யாசிகளுடன் சுறுசுறுப்பாக இருந்தது. மாஸ்டர், இந்திய மற்றும் வெளிநாட்டு அப்யாசிகள் பலரின் திருமணங்களை நடத்தி வைத்து கொண்டாடினார். மேலும், மணப்பாக்கம் மற்றும் நாட்ராம்பள்ளி ஆசிரமங்களில், தமது ஒரு மாத பயிற்சியை முடித்த அப்யாசிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். அப்யாசியும், பிரபல திரைப்பட இயக்குனருமான சகோதரர் லிங்குசாமி, தனது படப்பிடிப்புக் குழுவுடன், மாஸ்டரை அவரது குடிலிலும், ஆசிரமத்தில் அவர் உலா வந்து கொண்டிருந்தபோதும் படம் பிடித்துக் கொண்டிருந்ததைக் காண முடிந்தது. சில காட்சிகள், பாபூஜி மண்டபத்தின் அருகில் அமர்ந்திருந்த ஒரு அப்யாசிகள் குழுவுடன் மாஸ்டர் பேசிக் கொண்டிருந்தபோது எடுக்கப்பட்டன.

ஜனவரி 13-ம் தேதி, மாஸ்டர் ஒரு செயற்குழு கூட்டத்தை நடத்தினார். பின்னர், செயலலுவலர்களுடனான ஒரு இயல்பான (முறைசாரா) உரையாடலின்போது, மிஷனின் பணிகளை மேற்கொள்வதற்கு தகுந்த நபர்களை தேர்ந்தெடுப்பதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். அவர், "நற்பண்பு மற்றும் கல்வியறிவு உடைய நபர்களை நீ தேர்ந்தெடுக்க வேண்டும்; பின்னர் நான் அவர்களுக்கு திறனைக் கொடுப்பேன்' என்று பாபூஜி என்னிடம் கூறினார்" என்றார்.

ஜனவரி 15-ம் தேதி, பாபூஜி நினைவு ஆசிரமத்தில், சுமார் 4500 அப்யாசிகளும் 500 குழந்தைகளும் இருந்தனர். காலையில் மாஸ்டர் சத்சங்கம் நடத்திய பின்னர், சகோதரர் ஆர். சக்ரபாணி, மாஸ்டரின் மீதான தனது அன்பை வெளிப்படுத்தி, ஒரு ஈடுபாடு நிறைந்த உரையாற்றினார். அவர், பழைய தமிழ்த்திரைப்பட பாடல்களிலிருந்து மேற்கோள் காட்டி, அவற்றை ஆன்மீகத்திற்கும் மாஸ்டருக்கும் தொடர்புபடுத்தினார்.

16-ம் தேதி, மாஸ்டர் வழக்கம் போல ஆசிரமத்து மாடுகளை வாழ்த்த மாட்டுக்கொட்டகைக்குச் சென்றார். அன்று விவசாயிகள் தங்களது கால்நடைச் செல்வங்களை அலங்கரித்துக் கொண்டாடும் மாட்டுப் பொங்கல் தினமாகும்.

இந்க சமயத்தில், மாஸ்டர், ஒரு நீண்ட இடைவேளைக்குப் பிறகு தாம் செய்யும் வெளிநாட்டுப் பயணமான துபாய் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார். ஜனவரி 19-ம் தேதி காலையில் அவர் துபாய்க்கு புறப்பட்டுச் சென்றார்.





## துபாய்

### துபாயில் சகஜ மார்க்க ஆன்மீக நிறுவனத்தின் தியான மையத் திறப்பு விழா, 21 ஜனவரி, 2011

சகஜ மார்க்க ஆன்மீக நிறுவனத்தின், மத்திய கிழக்கு பகுதிக்கான வரலாற்றுப் பதிவேட்டில், இந்நிகழ்ச்சி வரலாற்றுச் சிறப்புமிக்கதாகவும், புதியதோர் துவக்கமாகவும் விளங்கும். கடந்த 1994-ல், எப்போதேனும் இப்பகுதியில் ஒரு தியான மையம் வரக்கூடுமா என்று மாஸ்டரிடம் கேட்கப்பட்டபோது, அவர், "நீங்கள் தியானம் செய்து அதற்காக கடுமையாக உழைத்தால் மட்டுமே, அவரது அருளால் அது நடக்கும்" என்று பதிலளித்தார். கடந்த 20 ஆண்டுகளில், இப்பகுதியின் மீதான மாஸ்டரது அன்பு, வழிகாட்டுதலுடன் கூடிய இடைவிடாத கவனிப்பு மற்றும் சளைக்காத வருகையின் விளைவாக, மத்திய கிழக்கு நாடுகளில் பயிற்சி செய்யும் 1500-க்கும் மேற்பட்ட அப்யாசிகள் மற்றும் கிட்டத்தட்ட 100 பிரசெப்டர்களைக் கொண்ட ஒரு சகஜ மார்க்க குடும்பம் இருக்கிறது.

ஜனவரி 19, 2011 அன்று, மாஸ்டர் ஒரு இதயப்பூர்வமான வரவேற்பை எதிர்கொண்டு, துபாய் வந்தடைந்தார். அது மதிய உணவு வேளையாக இருந்தபோதிலும், அவரை வரவேற்பதற்காக கூடியிருந்த எல்லா அப்யாசிகளுக்கும், ஒரு சிட்டிங் கொடுக்க முடிவு செய்தார். 20-ம் தேதி, மாஸ்டர், ஈரானிய மன்ற அரங்கத்தில் கடைசி சத்சங்கத்தை நடத்தினார். அப்போது அவர், சுமார் ஆறு வருடங்களுக்கு முன்னர் இதே இடத்தில் தான் முதல் சத்சங்கத்தை நடத்தியதை நினைவு கூர்ந்தார். பின்னர் அவர், ஈரானிய மன்ற அலுவலர்களுக்கு, அவர்கள் கடந்த வருடங்களில் அளித்த ஆதரவைப் பாராட்டும் வகையில் ஒரு நினைவுப் பரிசை வழங்கினார்.

21-ம் தேதி, மாஸ்டர், புதிய துபாயின், வேகமாக வளர்ந்துவரும் ஜுமெய்ரா லேக் டவர்ஸ்-ல் அமைந்துள்ள மையத்தை திறந்து வைக்க வருகை தந்தார். அங்கே, ஆசிரம செயற்குழு மற்றும் ஐக்கிய அரபு நாடுகளைச் சேர்ந்த பிரசெப்டர்களால் வரவேற்கப்பட்டார்.

அவர் ஒரு நினைவுப் பலகையை திறந்து வைத்து தியான மையத்தை பாபூஜி மகராஜின் நினைவாக அர்ப்பணித்தார். சுமார் 1100



அப்யாசிகள், மேல் தளத்தில் பொறுமையாகக் காத்திருந்து, மாஸ்டர் ரிப்பனை கத்தரித்த போதும், திரைச்சீலைகளை விலக்கி ஒரு அழகான பின்திரையை வெளிப்படுத்தியபோதும், அதை பல திரைகளில் நேரலையாக பார்த்தனர். பின்னர் மாஸ்டர், மையத்தின் சுவர்களை அலங்கரித்த சகஜ மார்க்க மாஸ்டர்களின் பொன்மொழிகளைப் பார்வையிட்டார்.


சத்சங்கத்தை நடத்தி முடித்த பிறகு, மாஸ்டர் அந்த சிட்டிங்கைப் பற்றி நிறைய சொல்லலாம் என்றார். இந்த மகிழ்ச்சியான தருணத்தைக் குறிக்க, அவர் அப்பகுதிக்கு மேற்கொண்ட பயணங்கள் சம்பந்தப்பட்ட புகைப்படங்கள் அடங்கிய ஒரு புத்தகம் மற்றும் அவர் அங்கே நிகழ்த்திய, தேர்ந்தெடுக்கப்பட்ட உரைகள் அடங்கிய ஒரு DVD ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நினைவுமலரை வெளியிட்டார்.

மாஸ்டர் அங்கு தங்கியிருந்தபோது, பாகிஸ்தான், குவைத், பஹ்ரைன், ஓமான், ஈரான், சௌதி, அல்ஜீரியா, துனீசியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிறு அப்யாசி குழுக்களை சந்தித்துப் பேசினார். இந்நிகழ்ச்சிகளின்போது, மாஸ்டர் அவரது இயல்பான, இலகுவான ஆனால் ஆழ்நோக்கம் கொண்ட விதத்தில், வழிமுறைகள் மற்றும் உத்வேகம் இரண்டையும் அளித்து, அப்யாசிகளை தன்பால் ஈர்த்தார். பாகிஸ்தானைச் சேர்ந்த இருபது பேர் கொண்ட குழுவுடன் அவர் கணிசமான நேரத்தை செலவழித்தார். பலருக்கு, இதுதான் அவரது பௌதிக பிரசன்னத்தில் இருப்பதற்கான முதல் வாய்ப்பாக இருந்தது.

சில நாட்களில், மாஸ்டர் அப்யாசிகளின் வீடுகளுக்கு வருகை தந்து, ஒரு சிட்டிங் கொடுப்பது அல்லது சற்று இளைப்பாறுவது மற்றும் ஆன்மீக விஷயங்களைப் பற்றி பேசுவது அல்லது பழைய ஞாபகங்களை நினைவு கூறுவது என்பதாக இருந்தார்; இவை எப்போதுமே அப்யாசிகளின் உள்முக செயற்கூறுகளைத் தூண்டுவதாக இருந்தன. மாஸ்டர் இரண்டு முறை கடைவீதியில் சிற்றுலா சென்று வந்தார். அவரது அன்பான பிரசன்னத்தினால், அவரால் மட்டுமே முடிந்த விதத்தில், சூழலையும் மக்களின் மனதையும் தொட்டார்.

அவர் நமக்கு நினைவூட்டியவாறு, இந்த புதிய, மனித ஒருங்கிணைப்பிற்கான சகஜ மார்க்க ஆன்மீக நிறுவனத்தின் தியான மையம், பின்புலம், ஜாதி மற்றும் மத வேறுபாடுகளின்றி





துபாயி

அனைவராலும் பயன்படுத்தப்பட வேண்டிய ஒரு முக்கியமான இடமாக விளங்கும்; நமது வருங்கால சந்ததியினருக்கு தனிமனித அமைதியையும் கூட்டிணக்கத்தையும் கொண்டு வரும்.

மாஸ்டரிடமிருந்து வந்த சில முத்துக்கள்:

- பாபூஜி, "எதுவுமே, காண்பதைப்போல சுலபமாக இருக்காது, அல்லது காண்பதைப்போல கடினமாகவும் இருக்காது" என்று வழக்கமாகக் கூறுவார்.
- ஒரு சகோதரி மாஸ்டரிடம் வந்து, "எனக்கு உங்கள் உதவி தேவைப்படுகிறது" என்றார். அதற்கு மாஸ்டர், "நம் அனைவருக்கும் உதவி தேவைப்படுகிறது; நான் உங்களுக்கு உதவுகிறேன். நீங்கள் எனக்கு உதவ வேண்டும், நான் உங்களுக்கு உதவ வேண்டும்; இவ்வாறாக நாம் ஒன்றாக செல்கிறோம். நான் வேடிக்கையாகச் சொல்லவில்லை. நான் சிரிக்கிறேன், ஆனால் வேடிக்கையாகப் பேசுவதில்லை. நான் நிதர்சனமாக சொல்கிறேன். என் உதவியை உறுதியளிக்கிறேன் மற்றும் நீங்களும் உங்கள் உதவியை எனக்குச் செய்யுங்கள்."
- "நமது கருத்தரங்கங்கள், கல்வி சார்ந்ததாக இருக்கக்கூடாது, அவை உத்வேகம் சார்ந்ததாக இருக்க வேண்டும்."
- இப்பகுதியில் வாழும் மக்களுக்கான வாழ்க்கை முறையைப் பற்றி பேசும்போது, மாஸ்டர், "மாற்றம் வந்து கொண்டிருக்கிறது, மெதுவாக ஆனால் நிச்சயமாக வந்து கொண்டிருக்கிறது. அதற்கு பொறுமையும் பிரார்த்தனையும் தேவைப்படுகின்றன" என்றார்.

## மாஸ்டரின் வட இந்திய சுற்றுப்பயணம்

ஜனவரி 28, 2011 முதல் பிப்ரவரி 13, 2011 வரை

துபாயில் (ஐக்கிய அரபு நாடுகள்) பத்து நாட்கள் இருந்த பிறகு, ஜனவரி 28-ம் தேதி மாஸ்டர் தில்லி வந்தடைந்தார். 29-ம் தேதி இரண்டு சத்சங்கங்களை நடத்திய பின்னர், 30-ம் தேதி அவர் குர்காவுன் ஆசிரமத்திற்கு சென்றார். அங்கே அவர் ஞாயிறு சத்சங்கத்தை நடத்தினார். சத்சங்கத்திற்கு பிறகு, மாஸ்டர், புதிதாக நிறுவப்பட்டுள்ள துரோணாச்சாரியார் சிலையை திறந்து வைத்தார். மதிய உணவிற்கு பிறகு, அவர் தனது அலுவலகத்திற்கு வெளியே


தில்லி



ருத்ராபூர்

வந்து, அப்யாசிகள் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார். பிப்ரவரி 1-ம் தேதி, இரண்டு திருமணங்களை நடத்தி வைத்தார். பின்னர், சாலை மார்க்கமாக ருத்ராபூருக்கு புறப்பட்டுச் சென்றார்.

## ருத்ராபூர் - லாலாஜி மகராஜ் பிறந்தநாள் விழா

அந்த தருணமானது தனிச் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. மாஸ்டர் 7.30 மணி சத்சங்கத்தை, காட்டேஜிலிருந்தபடியே வழங்கினார். அருகாமையில் உள்ள மையங்களிலிருந்து

200-க்கும் மேற்பட்ட அப்யாசிகள், ஆதிகுரு லாலாஜியின் பிறந்தநாள் விழாவினை கொண்டாட ஒன்று கூடியிருந்தனர். மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தார். மாஸ்டருக்கு தொந்தரவு கொடுக்காத வகையில், அப்யாசிகள் அவரைச் சுற்றிலும் அமர்ந்து அவரை பார்த்து மகிழ்ந்தனர். மாஸ்டர் மாலை சத்சங்கத்தை 5.00 மணிக்கு வழங்கினார். அதனைத்தொடர்ந்து சகோ.குர்பிரித் சிங் அவர்களால் பஜனை பாடப்பட்டது. மாஸ்டரை மகிழ்விக்கும் வகையில், நிகழ்ச்சியானது 'அப்டபெ மார்பட்' வுடன் நிறைவடைந்தது. இமயமலையிலுள்ள ஆசிரமமான சத்கோல் பயணத்திற்கு முன்பாக, மாஸ்டர் ருத்ராபூரில் தங்கி, நன்றாக ஓய்வெடுத்து சென்றார்.

## நௌகுச்சியாதாலில் தங்குதல்

பிப்ரவரி 4-ம் தேதி மாஸ்டர் நௌகுச்சியாதால் ஆசிரமத்திற்கு சென்றார். நௌகுச்சியாதாலில் உள்ள மாஸ்டரின் அலுவலகமானது புதுப்பிக்கப்பட்டிருந்தது. அங்கு செய்யப்பட்டிருந்த மாற்றங்கள், மாஸ்டர் விரும்பத்தக்க வகையில் அமைக்கப்பட்டிருந்தது. அவர் அங்கு தங்குதலை மேலும் ஒரு நாள் நீட்டிப்பதாக அறிவித்தார். மாஸ்டர், ஒவ்வொரு நாளும் காலை, மாலை சத்சங்கங்களை அலுவலகத்திலிருந்து வழங்கினார். பால்கனியிலும், அறைகளிலும் இருந்த 200-க்கும் மேற்பட்ட அப்யாசிகள், நல்ல ஒழுக்கத்துடன் அமர்ந்திருந்தனர். அடுத்தநாளில் சகஜமான பேச்சின்பொழுது, மாஸ்டர் மகிழ்ச்சியையும், வலிகளையும் பற்றி பேசினார். மகிழ்ச்சியானது எப்படி ஒருவரை பலவீனமாக்குகிறது என்றும், வலியானது எப்படி பலமானவராக மாற்றுகிறது என்றும் கூறினார். அங்கு வருகை புரிந்த ஒருவர் மாஸ்டரிடம், ஏற்கனவே நம்முடைய இதயம் தூய்மையானதாக இருக்கின்ற பொழுதிலும், ஆன்மீக பயிற்சியானது நமக்கு ஏன் தேவைப்படுகிறது என கேட்டார். அதற்கு மாஸ்டர் தூய்மையான இதயம் போதுமானதல்ல, அதுதான் அடிப்படை தேவை, நமது இதயம் தூய்மையாய் இருக்கின்றபொழுது, அங்கு தெய்வீகத்தை வைக்கவேண்டுமென்ற தேவை நமக்கு ஏற்படுகிறது என்றார். ஞாயிறு காலை சத்சங்கத்தை வழங்கிவிட்டு, மாஸ்டர் சத்கோலிற்கு கிளம்பினார்.



நௌகுச்சியாதால

## சத்கோல் - பசந்த் பஞ்சமி

மோசமான சாலைகளினால், வறட்சியான பயண அனுபவத்துடன், மாஸ்டர் பிப்ரவரி 6-ம் தேதி காலை 11 மணிக்கு வந்தடைந்தார். அனுமதி இல்லாமல் வந்திருந்த அப்யாசிகள் அனைவரும், மதிய உணவிற்குப் பிறகு செல்ல வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டனர். மாஸ்டர்

7-ம் தேதி காலை 9.00 மணிக்கு சத்சங்கம் அளித்து, இரண்டு திருமணங்களையும் நடத்தி வைத்தார். நூலகத்தையும், கருத்தரங்கு அறையையும் தொடங்கி வைத்தார். மேலும், இந்த வருகையில் ஒரு கருத்தரங்கு இருக்கிறது என்று அனைவருக்கும் தெரிவித்தார்.

பிப்ரவரி 8 பசந்த் பஞ்சமி அன்று காலை 9.00 மணிக்கு சத்சங்கம் வழங்கினார். கடந்த சில வருடங்களாக மாஸ்டர், பசந்த் பஞ்சமி தினத்தை சத்கோலிலேயே கொண்டாடி வருகிறார். சத்சங்கம் முடிந்ததும் மாஸ்டர் மிகவும் களைப்படைந்து காணப்பட்டார். ஆனாலும், அமர்ந்திருந்து மிஷனின் புதிய பதிப்புகளை வெளியிட்டார். அதற்குப்பிறகு, மாஸ்டர் நிர்வாக கோட்பாடுகள் கருத்தரங்கில் கலந்து கொண்டார். அந்த கருத்தரங்கானது நிர்வாக வல்லுனராக உள்ள அப்யாசி சகோதரர் ஒருவரால் நடத்தப்பட்டது. அந்த ஒன்றரை மணி நேர உரையை கேட்டு மாஸ்டர் மிகப்பெரிய அளவில் மகிழ்ச்சி கொண்டு, தன்னை களைப்பிளிருந்து புதுப்பித்துக் கொண்டார். மாஸ்டர் ஆசிரம அலுவலகத்திற்கு நடந்து சென்றார். செல்கிற வழியில் தியோதர் மரங்களின் வளர்ச்சியை பார்த்துக்கொண்டே சென்றார். பிறகு, மாஸ்டர் அலுவலகத்திற்கு முன்பாக இருக்கும் இடத்தில், திறந்த வெளியில் மதிய உணவை அனைவருடனும் சேர்ந்து உண்பதற்காக இணைந்து கொண்டார்.

## ஹல்துவானியில் புதிய ஆசிரமத்தை தொடங்கி வைத்தல்

பிப்ரவரி 9, அன்று மாஸ்டர் ருத்ராபூர் சென்றார். 11-ந் தேதி காலையன்று ஹல்துவானி சென்று, புதியதாக கட்டப்பட்ட ஆசிரமத்தை தொடங்கி வைத்தார். அவரது வருகையின் பொழுது, சாலை முழுவதும் பதகாஸ் (அந்த பகுதியில் உள்ள பாரம்பரிய அலங்காரம்) மூலம் வரவேற்பு அளிக்கப்பட்டது. மாஸ்டர் திரைச்சீலையை நீக்கி, ஆசிரம தொடக்க விழா நினைவுக்கல்




சத்கோல்






மார்ச் 2011 மலர் 4 இதழ் 2
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்


ஹல்துவானி

பலகையை திறந்து வைத்தார்.
ரிப்பனை வெட்டி தனது அலுவலகத்திற்குள் நுழைந்தார். உள்ளூர் சகோதரிகள், ஒரே மாதிரியான வண்ணமயமான உடைகளை அணிந்துகொண்டு பாடல்களை பாடினர். மாஸ்டர் பாபூஜி மகராஜை வணங்கி பிரசாதம் வழங்கினார். சமையல் கூடத்தில் நெருப்பு பற்ற வைத்துவிட்டு, பால்கனிக்கு நடந்து சென்றார். அங்கு 1200-க்கும் மேற்பட்ட அப்யாசிகளுக்கு சத்சங்கம் அளிக்க, அவருக்கென்று மேடை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பிறகு, மாஸ்டர் உரை நிகழ்த்தினார். ஆன்மீக முன்னேற்றத்திற்காக மட்டுமே ஆசிரமங்கள் பயன்படுத்த வேண்டுமென கூறினார். அவர் அப்யாசிகளுடன் வெயிலிலேயே அமர்ந்து, சத்சங்கத்தில் அவர்களுடைய அனுபவத்தை கேட்டறிந்தார். மதிய உணவிற்குப் பிறகு, மாஸ்டர் ருத்ராபூருக்கு சென்றார்.

சுற்றுப்பயணத்தின் பொழுது வழங்கப்பட்ட சில முக்கிய மேற்கோள்கள்:

- நீங்கள் கடினமாக உழைக்கும்பொழுது, இதயத்திலிருந்து செய்யுங்கள்; யாரும் உங்களுக்கு தீங்கு விளைவிக்க முடியாது.
- சங்கல்ப சக்தி என்பது முடிவெடுத்தலுக்கும், நடைமுறைபடுத்தலுக்கும் இடையே உள்ள ஆற்றலாக இருக்கிறது, மூளையிலுள்ள நரம்பு செல்களைப் போல.
- சங்கல்ப சக்தியின் செயல்பாடு ஒழுக்கத்தில் இருக்கிறது.
- அன்பு செலுத்த திறன் இல்லாதது என்பது, அன்பு செலுத்த விருப்பமில்லாததிலிருந்து வேறுபட்டது.
- பாபூஜி மேற்கோளிலிருந்து மாஸ்டர் கூறியது, "கவலை என்பது, தவறாக திசை திருப்பப்பட்ட எண்ணங்கள்."
- மகிழ்ச்சி என்பது தற்காலிகமானது, ஆனால் பேரானந்தம் நிலைத்திருக்கக்கூடியது.

12-ந் தேதி மாலை, வெளிநாட்டு அப்யாசிகள் குழு ஒன்று, காட்டேஜிற்கு வெளியே பாடிய பாடல்களையும், புல்லாங்குழல் வாசிப்பையும், மாஸ்டர் அனுபவித்து மகிழ்ந்தார். அடுத்தநாள் ஞாயிறு சத்சங்கம் வழங்கிவிட்டு, டெல்லிக்கு சென்றார். செல்கிற வழியில் மதிய உணவை மொரதாபாத் ஆசிரமத்தில் முடித்து சென்றார்.



## ஜோத்பூர் - நினைவு கூறத்தக்க வருகை

தற்பொழுது, மாஸ்டருடைய நீண்ட பயணங்களுக்கிடையே, 10 வருடங்களுக்குப் பிறகு, ஜோத்பூர் ஆசிரமத்திற்கும் குறுகிய காலத்திற்குச் சென்று வந்தார். ராஜஸ்தான் முழுவதிலுமிருந்து மூன்றாயிரம் அப்யாசிகள் கூடி இருந்தனர். இந்த புதிய தியானக்கூடமானது மாஸ்டரால் வழங்கப்பட்ட பரிசு எனவும், இந்த பாலைவனப் பகுதியில் உள்ள ஆன்மீகச் சோலையாக இருக்கிறது என்பதையும் உணர்ந்தனர்.

பிப்ரவரி 15-ந் தேதி, டெல்லியிலிருந்து மாஸ்டர் விமானம் மூலமாக வந்துசேர்ந்தார். அவருடன் சூரிய ஒளியையும் சேர்த்து கொண்டு வந்தார். அது, இரு நாட்களாக தொடர்ந்து பெய்த மழையினால் ஏற்பட்ட ஓய்விற்கு முக்கிய தேவையாக இருந்தது. ருத்ராபூரிலிருந்து டெல்லிக்கு நீண்ட தூரம் பயணம் செய்த போதிலும், அவர் புத்துணர்ச்சியுடனே காணப்பட்டார்.

மாஸ்டர் இருமுறை வெளியே வந்து அப்யாசிகளுடன் கலந்துரையாடிய பொழுது, அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். மாஸ்டர் அப்யாசிகளுடன் வெளியே அமர்ந்து, நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்த சமயத்திலும், மாஸ்டர் அலுவலக அறையின் கதவு திறந்தே இருந்தது. மாஸ்டர் தனது பாதத்தை தொட்டு வணங்கிய சகோதரியிடம், நம்முடைய மார்க்கத்தில் இதற்கு அனுமதி இல்லை என்றும், இது போன்ற விஷயங்களை, அதனுடைய விளைவுகளை சிந்திக்காமலேயே, நாம் செய்து விடுகிறோம் என்று கூறினார். மேலும் அவர், நாம் அனைவரும் நமது நமது மிஷனிற்கு எதிராக உள்ளவர்களுக்காகவும், எதிர் செயலாற்றும் அப்யாசிகளுக்காகவும், பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டுமென அறிவுரைத்தார்.

பிப்ரவரி 16-ம் தேதியன்று காலை 9.15-க்கு ஜோத்பூர் ஆசிரமத்தை தொடங்கி வைத்த பிறகு, புதிய தியானகூடத்தில் சத்சங்கம் வழங்கினார். பிறகு சகோ. ரஞ்சனா மேத்தா சில பஜன் பாடல்களை பாடினார். பின்னர், மாஸ்டர் அலுவலகத்திற்கு சென்று, வெயிலை அனுபவித்துக் கொண்டே அப்யாசிகளுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தார். அவர் வெளியில் வந்து, மாலையில் கலாச்சார நிகழ்ச்சியில் பங்கேற்கும் குழந்தைகளை சந்தித்தார்.


மாஸ்டர் பிப்ரவரி 17-ந் தேதி, அப்யாசிகள், சத்சங்கத்தில் கலந்து கொள்ளாமல், எப்பொழுதும் காட்டேஜ் முன்பாகவே காத்திருக்கின்றனர் என்று தன்னுடைய ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார். அனைத்து தன்னார்வ தொண்டர்களுக்கும், காலை 11.30 மணிக்கு மாஸ்டர் சிட்டிங் வழங்கினார். வெளிநாட்டினர் ஆட்சி செய்த இடங்களுக்கு வருவதைப் பற்றிய விவாதத்தின் பொழுது, இது போன்ற நடவடிக்கைகள் உண்மையான மதிப்பை விட, மேலும் அகங்காரத்தை அதிகப்படுத்தும் வகையில் இருக்கிறது என்று கூறினார். மதியத்திற்குப் பிறகு மாஸ்டர் டெல்லிக்கு கிளம்பினார்.


மொரதாபாத்


ஜோத்பூர்




# புதியவெளியீடுகள்




அவர்சொல்வதுயாதெனில் - 111
தமிழ்





ஹார்ட்ஸ்பீக்ஸ் 2006
கன்னடம்



ட்ரூத் எட்டெர்னல்
மலையாளம்




கம்ப்ளீட்வொர்க்ஸ் ஆப் ராம் சந்த்ரா (லாலாஜி) தொகுதி11
ஹிந்தி




தி வொண்டர்புல் 10 அண்ட் ஒய்
ஸ்பானிஷ், டானிஷ், இத்தாலியன், ஜெர்மன், ஆங்கிலம், இந்தி, பிரெஞ்ச் மற்றும் போர்ச்சுகீஸ்

பசந்தின் போது மாஸ்டர் இந்த புதிய வெளியீடுகளை வெளியிட்டார்.





ஹார்ட்ஸ்பீக்ஸ் 2008
மராத்தி




ஹார்ட்ஸ்பீக்ஸ் 2008
குஜராத்தி




ஹார்ட் ஸ்பீக்ஸ் 2008
இந்தி




ப்ரே ஃபார் சேன்ஜ்
DVDசெட்

# அறிவிப்புகள்

## புதியநியமனங்கள்

அஜய் குமார் பட்டர்
மண்டல பொறுப்பாளர் மேற்கு வங்கம் (மண்டலம் 13)

மிசல் மெஹ்தா
மைய மேலாளர், கல்கத்தா மையம்

தீபக் ஷா
ஹல்துவானி மையப் பொறுப்பாளர்

அனில் சிங் பிஷ்ட்
ஹல்வானி ஆசிரம மேலாளர்

## மாஸ்டரின் பிறந்த நாள் விழா

மாஸ்டர், அவருடைய 85 வது பிறந்த நாளினை திருப்பூர் (தமிழ் நாடு) வைர விழா பூங்காவில், 23 ம் தேதி ஜுலை முதல் 25ம் தேதி ஜுலை 2011 வரை கொண்டாட, நமக்கு கருணையுடன் அனுமதி அளித்துள்ளார். இது இந்தியாவில் தேசிய அளவில் நடைபெற இருக்கும் ஒரு விழா. இந்த விழாவில் பங்கு பெற்று நம் அன்பார்ந்த மாஸ்டரின் பிரசன்னத்தில் இருக்க அனைத்து அப்யாசிகளும் அழைக்கப்படுகின்றனர்.

# கடந்த காலத்தைப்பற்றிய ஒரு பார்வை

பாபுஜி வெளி நாட்டு பயணமாக மலேசியா சென்றபோது, சென்னையில் சில நாட்கள் தங்கியிருந்தார். மாஸ்டரின் நாட்குறிப்பில் இருந்து எடுக்கப்பட்ட சிறு பகுதி, பின் குறிப்பிடப்பட்டுள்ளது.



1977ம் ஆண்டு ஏப்ரல் 3ம் தேதி ஞாயிற்றுக்கிழமை:

மாஸ்டர் காலை 8 மணிக்கு காயத்ரி வந்தார். வெளியூர்களில் இருந்து வரும் அப்யாசிகள் ஞாயிறு காலை சத்சங்கத்தில் கலந்து கொள்ள வசதியாக, சத்சங்கம் காலை 9 மணிக்கு மாற்றி வைக்கப்பட்டது. மிஷனின் நெல்லூர் மையத்தில் இருந்து, மேலும் ஒரு பேருந்து நிறைய அப்யாசிகள் வந்ததையடுத்து, வீடு அப்யாசிகளின் வருகையால் நிரம்பி இருந்தது. அன்று காலை காயத்ரியில், இருநூற்றுக்கும் அதிகமான அப்யாசிகள் வந்ததாக கணக்கிடப்பட்டது. மேல்மாடி, தரைதளத்தின் ஹால், வெளி வராண்டா, நடைபாதைத் தளம் அனைத்திலும் அப்யாசிகள் நிறைந்து இருந்தனர். அங்கு பசந்த் பஞ்சமியின் சூழ்நிலை நிலவியது. மாஸ்டர் அவருடைய அறையில் இருந்து கொண்டு நாற்பது நிமிடங்களுக்கும் சற்று அதிகமாக பிராணாஹுதி அளித்தார். அது மிக அற்புதமான அமர்வாக இருந்தது.

தியானம் முடிந்தவுடன் இட்லி, வடை, டீ, வாழைப்பழம் ஆகியவற்றுடன் காலை உணவு அப்யாசிகளுக்கு வினியோகிக்கப்பட்டது. காலை உணவு வினியோகம் ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது. அனைவரும் காலை 11.30 மணிக்கு கலைந்து சென்றனர். பிற்பகல் மாஸ்டர் இட்லி சாம்பாருடன் எளிமையாக மதிய உணவினை முடித்துக்கொண்டு நன்றாக ஓய்வு எடுத்துக்கொண்டார். அப்யாசிகள் மீண்டும் பிற்பகல்

4 மணிக்கு ஒன்று கூடினர். வீடு மறுபடியும் நிறைந்தது. ஒரே சமயத்தில் மாடியிலும், கீழேயும் பிரசெப்டர்கள் ஸ்ரீ எஸ்.கே.ராஜகோபாலன், ஸ்ரீ சி.ஏ. ராஜகோபாலாச்சாரி மற்றும் ஸ்ரீ வி. வெங்கடபதி ஆகியோரால் சகஜமார்க்கத்தைப் பற்றிய உரைகள் நிகழ்த்தப்பட்டன. பிற்பகல்

6.30 மணிக்கு, மாஸ்டர் மீண்டும் சுமார் 20 நிமிடங்கள் சத்சங்கம் நடத்தினார். மாஸ்டர் இரவு உணவுக்குப்பின்னர் பெசன்ட் நகர் சென்றார். இந்த நாள் மிக்க மகிழ்ச்சிகரமான, அனைவருக்கும் ஆன்மீக நலன்களை அள்ளித்தந்த நாளாக இருந்தது. தன்னைக் காண வெகு தொலைவில் இருந்து பலர் வந்தது குறித்து மாஸ்டர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். மூன்று பேருந்துகள் நிறைய, ஆந்திராவில் இருந்து வந்த அப்யாசிகள் அனைவரும் அன்று மாலை திரும்பிச்சென்றனர். வெளியூர் அப்யாசிகள் பெரும்பகுதியினர் அன்று மாலை வீடு திரும்பினார்கள்.

யாத்ரா- வால்யூம்2 ப்ளாஸம்ஸ் ஃப்ரம் தி ஈஸ்ட்

For Private Circulation Only
மார்ச் 2011 மலர் 4 இதழ் 2
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# பூஜ்ய லாலாஜி மகராஜ்
## 139வது பிறந்த நாள் விழாக்கள்

"மகிழ்ச்சி என்பது வெளியில் எங்கேயும் இல்லை. அது நாம் நிலைநிறுத்தும் கவனத்தில் இருக்கிறது, நம்முடைய உறுதி மாறாத விருப்பத்தில் இருக்கிறது. மேலும் நம் புத்தியினை விலக்கிக்கொள்வதில் இருக்கிறது. இந்த இரகசியத்தினை அறிந்தவர்கள் மகிழ்ச்சியினை வெளியே தேடவேண்டிய அவசியம் இல்லை"

லாலாஜி மகராஜ்



ஜோத்பூர்



பெங்களூர்

நம் மிஷனின் ஆதி குருவான சமர்த்த குரு பூஜ்ய லாலாஜி மகராஜின் 139வது பிறந்த நாள் விழா, நாடு முழுவதிலும் ஊக்கத்துடனும், பக்திபூர்வமாகவும் கொண்டாடப்பட்டது. அனைத்து மையங்களிலும், காலை 7.30 மணிக்கு சத்சங்கத்துடன் விழா ஆரம்பிக்கப்பட்டது. பலர் லாலாஜியின் வாழ்க்கையினைப்பற்றிய வீடியோ காட்சியினைத் திரையிட்டனர். லாலாஜி மஹராஜ் பற்றிய நமது மாஸ்டரின் உரைகள், "சத்தியத்தின் நித்தியம்"(Truth Eternal) புத்தகம் குறித்து கலந்துரையாடல், அப்யாசிகள் மற்றும் குழந்தைகள் நடத்திய குறு நாடகங்கள், கலை நிகழ்ச்சிகள், வரவேற்புக்கூட்டங்கள் மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசு வழங்குதல் ஆகியவற்றினை பலர் நடத்தினர்.

இந்த நிகழ்ச்சிகளைத் தவிர, அலகாபாத்(உ.பி) மையத்தில், பல் மருத்துவ சிகிச்சை மையத்தினை டாக்டர் வி.கே.அகர்வால் தொடங்கி வைத்தார். கட்டுரைப்போட்டிகளுக்கான நற்சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்தூரில், (ம.பி) மிஷனுக்கான புதிய இடத்தில், 800அப்யாசிகள் குழுமினர். "நான் கவனித்த என்னுள் ஏற்பட்ட மாற்றங்கள்" என்பது குறித்த சுய பரிசோதனை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதில் பல அப்யாசிகள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். விஜயவாடாவில் (ஆ.பி) சொற்பொழிவுகளுடன் கூட மாஸ்டரின் போதனைகள் குறித்த கேள்வி பதில் நிகழ்ச்சி 400 அப்யாசிகளால் நடத்தப்பட்டது. ஹைதராபாத் தும்குண்டா ஆசிரமத்தில், இதயத்தினை நெகிழ வைத்த "குரு பாதுகா அபயம்" என்ற நாட்டிய நிகழ்ச்சியுடன், "பிரதிபலிக்கும் சுயத்தின் சக்தி" என்பது பற்றிய குறு நாடகத்தினையும் 2000 அப்யாசிகள் கண்டு களித்தனர்.


ஹுப்லி


இந்தூர்

ஆங்குல்(ஒரிசா)ல் 120 அப்யாசிகள், சொற்பொழிவுகள், லாலாஜியின் வாழ்க்கைப்பற்றிய திரைப்படம் திரையிடுதல், வரவேற்புக்கூட்டம் நடத்துதல், கலை நிகழ்ச்சிகள் நடத்துதல் ஆகியவற்றை ஏற்பாடு செய்திருந்தனர். நாட்டின் தலைநகரமான டெல்லியில், ஆசைகளைத்தாண்டி ஆசையில்லா நிலைமைக்குச்செல்லுதல், சரணாகதியின் மூலம் சம்ஸ்காரங்களில் இருந்து விடுதலைப் பெறுதல், ஆகிய கருத்துக்களைத் தெளிவாக விவரித்த 'லக்ஷ்யா' மற்றும் 'கத்புட்லி' என்ற இரண்டு குறு நாடகங்கள் நடத்தப்பட்டன.


லால்பானியா

கர்நாடகாவில், சின்சோலி, சித்தாபுர், வாடி,ஷாஹ்பூர் மற்றும் சேடம், ஆகிய துணை மையங்களில் இருந்து வந்த 350 அப்யாசிகள், குல்பர்க்கா மையத்தில் நடைபெற்ற விழாவில் பங்கேற்றனர். சிர்சி, பேலூர், தார்வாட், கல்லூர், கடாக், நவ்நகர், நவல்குன்ட் மற்றும் ஹவேரி ஆகிய ஊர்களில் இருந்து வந்த 240 அப்யாசிகள், ஹுப்லி மையத்தில் நடைபெற்ற விழாவில் கலந்து கொண்டனர். 'கருடனின் குழப்பம்' என்ற குறு நாடகம் இளைஞர்களால் அற்புதமாக நடிக்கப்பட்டது. பெங்களூர் பரம்தாமில், மாஸ்டர்கள் மற்றும் அவர்களது போதனைகள் பற்றிய உரைகள், ஆன்மீக விழாக்களைப்பற்றிய நினைவுகள் ஆகியவற்றுடன், 1500 அப்யாசிகள் இந்த நாளினைக் கொண்டாடினர். மங்களூர் மற்றும் கொள்ளேகாலில், லாலாஜி மகராஜின் போதனைகள் மற்றும் அவரது எழுத்துக்கள் ஆகியவற்றில் கவனம் செலுத்தினர்.


ஹைதராபாத்

ஜோத்பூரில் (ராஜஸ்தான்) ஜெய்சால்மெர் சாலையில், கேறு கிராமத்தின் அருகாமையில் உள்ள, புதிய ஆசிரம நிலத்தில் விழா நடைபெற்றது. குரு சீடர் அன்பு குறித்து விவரிக்கும் அற்புதமான குறு நாடகம் மேடையில் நடித்து காண்பிக்கப்பட்டது. கௌஹாத்தியிலும், தின்சுக்கியாவிலும் (அஸ்ஸாம்) 'கவனி, கீழ்படி, அவரைப்பின்பற்று' என்பது பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

திருநெல்வேலியில், (தமிழ்நாடு) சகோ. ஏ.பி. துரை (இணைச்செயலாளர்) விழாவில் கலந்து கொண்டார். சுமார் 250 அப்யாசிகள் கன்னியாகுமரி, பனங்குடி, கொலையன்குளம், வடகன்குளம், தூத்துக்குடி, தென்காசி, நாகர்கோவில், ராஜபாளையம், கோவில்பட்டி மற்றும் தூவாலை ஆகிய இடங்களில் இருந்து வந்து கலந்துகொண்டனர். லாலாஜியின் புத்தகங்கள், லாலாஜியின் வாழ்க்கை மற்றும் லாலாஜியின் போதனைகள் குறித்து மூன்று சகோதரிகள் இனிமையான, சுருக்கமான உரை நிகழ்த்தினார்கள். அதன்பின்னர் மாஸ்டரின் போதனைகள் குறித்து குழு விவாதம் நடைபெற்றது. மதிய உணவுக்குப்பின்னர், தலைப்புக்களை குலுக்கல் முறையில் எடுத்து பேசும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்யாசிகள் தங்களுக்கு கிடைக்கப்பெற்ற தலைப்புக்கள் குறித்து இயல்பான முறையில் பேசினார்கள்.


மங்களூர்

## புதிய ஒளி மையம் - தஞ்சாவூர்

தமிழ் நாட்டிலுள்ள தஞ்சாவூர், மாஸ்டரின் சொந்த மாவட்டமாகும். இங்கு மிஷன் ஆசிரமம் அமைவது, மாஸ்டருக்கு மகிழ்ச்சியானதும் வெகு நாளைய விருப்பமுமாகும். பல வருட தேடலுக்கு பின், அப்யாசிகள், சரியான ஒரு நிலையிடத்தை வெற்றிகரமாக அமைத்துள்ளனர். திருவாரூர் செல்லும் சாலையிலிருந்து,

14கி.மீ தொலைவில் இந்த நிலம் அமைந்துள்ளது. 10 ஏக்கர் நிலப்பரப்பில், சவுக்கு, தென்னை, மாமரத் தோப்புகள் நிறைந்த இடம், மாஸ்டரின் விருப்பப்படி, ஆசிரமத்திற்காக பெறப்பட்டுள்ளது.

மேலும் இருபது ஏக்கர் நிலப்பரப்பை, 4000 ச.அடி வீதம் பிளாட்டுகளாக பிரித்து, அதில் அப்யாசிகள் குடியிருப்பு அமைவதற்கான திட்டம் உள்ளது. மாஸ்டரின் விருப்பத்திற்கிணங்க, பிளாட்டுகள் நிறைய இடம் மற்றும் தோட்டத்திற்கான வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலப்பரப்பில், தண்ணீர் வசதி தேவைக்கு அதிகமாகவே உள்ளது.

பிளாட்டிற்கான விலையில், சாலை அமைத்தல், தண்ணீர் வசதி, வடிகாலமைப்பு, போன்ற செலவுகளும் அடங்குவதால், அப்யாசிகள் கூடிய சீக்கிரமே வீடுகள் கட்டிக்கொண்டு, வரவிருக்கும் ஆசிரமத்திற்கு உறுதுணையாக இருந்து, அதனை பயன்படுத்துவார்கள்.

இந்திய கடற்படையில் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், மாலுமிகளுக்கும் மனச்சோர்வைக் கட்டுப்படுத்தும் நிகழ்ச்சி, பிப்ரவரி-9 அன்று, INS சதவாஹனாவில் நடைபெற்றது. நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஒரு நாள் முன்பே, கலந்து கொள்பவர்களுக்கு, அதை பற்றிய சிற்றேடுகள் வழங்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சியை படைத்துறை முதல்வர், சகோ. ஸ்ரீராம் அமர், முகவுரையுடன் தொடங்கி வைத்தார். சப்மரைன் பள்ளி அதிகாரிகளின் பொறுப்பாளர், சகோ.

V.R.S.நாகசர்மா, 'மனச்சோர்வையும், நேரத்தையும் தியானம் மூலம் ஒழுங்குபடுத்துதல்' என்ற தலைப்பில் உரையாற்றியதுடன், சகஜ மார்க்க தத்துவத்தையும் விளக்கினார். சகோ.G.V.ரவீந்திரா ஹிந்தியில் உரையாற்றினார். அதனைத் தொடர்ந்த கலந்துரையாடலில், பல்வேறு கேள்விகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சகோ.K.S.சப்தமுகுலு, கலந்து கொண்ட 150 நபர்களையும் விசாகப்பட்டினம் ஆசிரமத்திற்கு அழைத்தார். சகஜ மார்க்க பயிற்சியில் பலர் ஆர்வம் காட்டினர். விருப்பமுடையவர்களுக்கு அறிமுக சிட்டிங்குகளும் தொடங்கின.







## விபிஎஸ்இ நிகழ்ச்சி - வதோதரா

வதோதரா மையத்தின், விபிஎஸ்இ தன்னார்வத் தொண்டர்கள், "அணி உருவாக்குதல்" என்ற தலைப்பில்,

3-மணி நேர பயிலரங்கு ஒன்றை, அல்காபுரியின், பரோடா உயர்நிலைப் பள்ளியை சேர்ந்த, 6 மற்றும் 7ம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்காக நடத்தினர். பயிலரங்கில், அணிப் பண்புகளின் முக்கியத்துவம் பற்றி, களிப்பூட்டும் விதத்தில் வலியுறுத்தப்பட்டது. அணி உருவாக்குவதில், உள்ளார்ந்த ஈடுபாடு (Commitment), பங்களிப்பு,

(Contribution), கூடிப் பணியாற்றுதல் (Co-operation), தகவல் பரிமாற்றம் (Communication) மற்றும் வேற்றுமையை கையாளுதல் (Conflict Handling) ஆகிய ஐந்து C க்கள், பயிற்சிகள் மற்றும் விளக்கப்படங்கள் மூலம் விளக்கப்பட்டன.

உள்ளார்ந்த ஈடுபாட்டின் கருத்தை விளக்க, 'தி பிளைட் ஆப் கீஸ்'(The Flight Of Geese) என்ற விளக்கப்படம் காண்பிக்கப்பட்டது. பொருட்களை நினைவு வைத்துக் கொள்வதற்கும், தகவல் பரிமாற்றத்திற்கும் பயிற்சி அளிக்கப்பட்டன. இவை இரு-வழி தகவல் பரிமாற்றத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தின. 'உங்களால் முடிந்த வரை வெல்லுங்கள்' என்ற விளையாட்டு, கூடிப் பணியாற்றுதலையும், பொதுவான இலட்சியத்தின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தின.

மாணவர்கள் மிகுந்த கவனத்துடனும், ஈடுபாட்டுடனும் அனைத்து செயல்பாடுகளிலும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியை பாராட்டியதுடன், மேலும் வெவ்வேறு தலைப்புகளில், இவ்வாறான பயிலரங்குகளை மாணவர்களுக்கு தொடர்ந்து நடத்துமாறு அப்பள்ளி கேட்டுக் கொண்டது.

மனச்சோர்வைக் கட்டுப்படுத்துவதற்கான பயிலரங்கம், விசாகப்பட்டினம்

## பிரிபெக்ட் கூட்டம் - நாட்றாம்பள்ளி

நாட்றாம்பள்ளி ஆசிரமத்தில், ஜனவரி 7,8ம் தேதிகளில், தமிழ் நாட்டை சேர்ந்த சுமார் 55 பிரிபெக்ட்களுக்கு, கருத்தரங்கு நடத்தப்பட்டது. சகோ.A.P.துரை (இணை செயலாளர்) மற்றும் சகோ.S.பிரகாஷ் (மண்டல பொறுப்பாளர்), நிகழ்ச்சியை நடத்தினர். சகோ.பிரகாஷ் மையங்கள் வளர்ச்சியடைய செய்ய வேண்டியவை பற்றியும், புதிய பிரிபெக்ட்களை தேர்ந்தெடுப்பதற்கான கோட்பாடுகளை பற்றியும் விரிவாக உரையாற்றினார். மிஷன் வேலைகளில் ஈடுபடும் அப்யாசிகளை மாஸ்டர் உயர்வாகக் கருதுகிறார் என்று சகோ.A.P.துரை கூறினார். பிரசெப்ட்ராகப்போகும் ஒருவர், மாஸ்டரது பணியில் பங்கேற்று,தன் திறமைகளை உறுதி செய்ய வேண்டும். சகோ.பெருமாள், (இயக்குநர், CREST பெங்களூர்) பயிற்சி அளிப்பதன் அவசியம் பற்றியும், சகோ.N.S.நாகராஜா, 'மிஷனின் வளர்ச்சியும் அது எதிர்கொள்ளும் சவால்களும்', என்ற தலைப்பிலும் உரையாற்றினர்.

கோல்டன் சைலன்ஸ் நேரத்தில், சுயசோதனைசெய்துகொள்ளத் துணைபுரியும் 10 கேள்விகளை, சகோ.பிரகாஷ் கூறினார். 'பண்பு வளர்த்தலை பிறருக்கு எவ்வாறு ஊக்குவிப்பது', 'இல்லக் கூட்டங்களையும், வரவேற்பு கூட்டங்களையும் நடத்துவதில் ஏற்பட்ட அனுபவங்கள்', 'சகஜ மார்க்கம் பற்றிய மூடநம்பிக்கை - அதை எவ்வாறு உடைப்பது', 'சிட்டிங் கொடுப்பது மட்டுமின்றி மாஸ்டருக்காக என்ன செய்யலாம்', 'இலட்சியம் உடைய அப்யாசிகள் மற்றும் பிரிபெக்ட்களை எவ்வாறு அறிவது', ஆகிய தலைப்புகளில் குழு கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. பிரிபெக்ட்களுக்கு நடத்திய இரு விளையாட்டுகளும் அவர்களிடத்தில் மகிழ்ச்சியையும், சிரிப்பையும் ஏற்படுத்தியது. கலந்து கொண்டவர்கள் அனைவரும் தயக்கமின்றி ஒன்றிணைவதற்கு, ஒரு வாய்ப்பாக அமைந்தது. ஐந்து நபர்களைக் கொண்ட குழு, கேள்வி-பதில் நேரத்தில் பதிலளித்தது. கிரிக்கெட் விளையாட்டுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

மார்ச் 2011 மலர் 4 இதழ் 2
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

## கல்லூரி மாணவர்களுக்கு சொற்பொழிவு, பாலக்காடு, கேரளா

பாலக்காடு, மன்னம்பட்டாவிலுள்ள, VT பட்டதிரிபாத் கல்லூரி மாணவர்களுக்கு டிசம்பர் 27, 2010 அன்று, சகஜ மார்க்க அடிப்படையில் 'தியானம்' மற்றும் 'தியானத்தின் பலன்களும், அவசியமும்' ஆகிய தலைப்புகளில் சகோ.ரவிந்திரநாதன் மற்றும் சகோ. மோகன் தாஸ் A.K உரையாற்றினர்.

மேலான பண்பில் தனித்தன்மையை வளர்த்தல், கவனிப்புத் திறனை வளர்த்தல் மற்றும் தினசரி வாழ்க்கையில் ஒழுங்குமுறை ஆகியவற்றில் தியானத்தின் பங்கு என்பது பற்றி வெகுநேரம் விரிவாக விளக்கப்பட்டது. இளைஞனுடைய உரிமையும், வாழ்க்கையில் இலட்சியம் அமைப்பதன் முக்கியத்துவம் பற்றியும் சகோ.ரவிந்திரநாதன் பேசினார். தன் மனோசக்தியை வளர்த்தல், தன் மீதான பற்றுணர்வை தூய்மைப்படுத்துதல், சோம்பலை வெல்லுதல், போன்றவற்றை மாணவர்கள் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கலந்து கொண்டவர்களிடமிருந்து வந்த கவனித்தல், கோபத்தைக் கட்டுப்படுத்துதல், தொடர்பான பல கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டது. நிகழ்ச்சி, சகோ.வல்சகுமாரின் நன்றியுரையுடன் நிறைவடைந்தது. முதல் சிட்டிங் பெறுவதற்காக, அவரை தொடர்பு கொள்ளத் தேவையான விவரங்கள், கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

## குழு கலந்துரையாடல், மொரதாபாத்

பிப்ரவரி 6ம் தேதியன்று, மொரதாபாத், யோகாசிரமத்தில், முழு நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. சகோ.ஷ்ரவன் அவர்களின் முகவுரையுடன் தொடங்கிய நிகழ்ச்சியில், ஐம்பதிற்கும் மேற்பட்ட அப்யாசிகள், 'நற்பண்பு வளர்த்தல்' என்ற தலைப்பில் கலந்துரையாடினர். நற்பண்பு வளர்த்தலை பற்றி அனைத்து அம்சங்களிலும், விரிவாக விவாதிக்கப்பட்டன. சகோ.ராம், சகோதரி. நீலம், சகோ.அஜித் ஆகியோர், நிகழ்ச்சியையும், கேள்வி-பதில் நேரத்தையும், மிகுந்த உற்சாகத்துடன், ஒருங்கிணைந்து நடத்தினர்.

## பயிற்றுவிப்பவர்களின்மேம்பாட்டுக்கான நிகழ்ச்சி, பெங்களூர்

மிஷனின் பல்வேறு செயல்பாடுகளான, வரவேற்பு கூட்டம், விபிஎஸ்இ, வரவேற்பிடம், அறிவிப்புகள், இளைஞர் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ஈடுபடும், ஆர்வமுள்ள அப்யாசிகளை ஊக்குவிப்பதற்கு, பெங்களூர் மையத்தின் சார்பாக நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

பங்கேற்பவர்களுக்கு, நிகழ்ச்சி நடத்தும் போது, பொருளடக்கம், உடல் அசைவுகள், கொடுக்கும் விதம், பேச்சுக் குரலின் தன்மை போன்றவற்றில், பின்பற்ற வேண்டிய அம்சங்கள் கூறப்பட்டன. நிகழ்ச்சி, மூன்று பிரிவுகளாக, மூன்று மாதங்களில் நடத்தப்பட்டது. அவற்றில் இரு பிரிவுகள் பனசங்கரி ஆசிரமத்திலும், மூன்றாம்பிரிவு மற்றும் இறுதி பிரிவு, தங்கி கற்கும் நிகழ்ச்சியாக, CREST-லும் நடத்தப்பட்டன.

அனுபவமிக்க பேச்சாளர்கள் பலர், முக்கியமான விஷயங்களைக் கூறி, அவர்களது அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர். கலந்து கொண்டவர்களுக்கும், தலைப்புகள் வழங்கப்பட்டு, அதில் 5-7நிமிடங்கள் பேசுவதற்கும் அழைக்கப்பட்டனர். மேலும் இந்நிகழ்ச்சியைச் சிறப்பாகச் செய்வதற்கான கருத்துகளும் பெறப்பட்டன. CREST-ல் நடந்த, இறுதி நிகழ்ச்சியில், கலந்து கொண்டவர்களிடம், அவரவருக்கு நன்கறிந்த தலைப்புகளில், பணிகளை வழங்கியதுடன் நிறைவுற்றது.

அப்யாசிகளுக்கு, மிஷனின் பல்வேறு செயல்பாடுகளை எளிதாக்கும் வகையில், புதிய வாய்ப்பாக நிகழ்ச்சி அமைந்தது. அவருடைய அருளால், சுய முன்னேற்றத்திற்கும், மிஷனின் வளர்ச்சிகும், இந்நிகழ்ச்சி உறுதுணையாக இருக்கிறது.

## இளைஞர் மீதான கவனம், ஹைதராபாத்

ஜனவரி 8-9ம் தேதிகளில், ஹைதராபாத் மண்டல ஆசிரமத்தில், ஓர் இளைஞர் கூட்டம் நடத்தப்பட்டது. சுமார் 120 பேர் கலந்து கொண்டனர். லௌகீக வாழ்க்கையில் நாம் எதைச் செய்தாலும், அது நம் ஆன்மீக இலட்சியத்திற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சகோ.ஆனந்த் (மண்டல பொறுப்பாளர்) கூறினார்.

'மிலன் இளைஞர் பயிலரங்கு', 'சீனாவில் நடந்த கருதரங்கு', 'ஆன்மீகம் - ஒன்றிணைந்து வாழ்தலுக்கும், சகோதரத்துவத்திற்கும் ஓர் புதிய கலாச்சாரம்' ஆகிய வீடியோக்களும், CDக்களும் காண்பிக்கப்பட்டன. கலந்து கொண்டவர்கள், உற்சாகத்துடன் சில விளையாட்டுகளை விளையாடியும், தன்னார்வத்துடன் வேலைகளையும் செய்தனர்.

பாபூஜி மகராஜ் அவர்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும், 'ஜர்னி இன் டைம்' - (பகுதி-1)' என்ற படம், அப்யாசிகளின் இதயத்தைத் தொட்டது. பின் சகோ.ஆனந்த், சகோதரி. மதுமதி மற்றும் சகோ.ஸ்ரீநிவாசராவ், கேள்வி-பதில் நேரத்தை நடத்தினர். பயிற்சிமுறையை மையமாக வைத்தே கேள்விகள் இருந்தன. பலர் அறியாதிருக்கும், 'மிஷன் செயல்பாடுகளும் அதன் நிர்வாகமும்' பற்றி, சகோ.ரகு விளக்கப் படங்களின் மூலம் விளக்கினார். நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்த, ஆறு சத்சங்கங்கள், பங்கேற்றவர்களை மிகுந்த ஆன்மீக சூழலில் ஆழ்த்தியது.

'பரிணாம வளர்ச்சியில் ஈடுபடு' என்ற தலைப்பில், இளைஞர்களுக்கான பயிலரங்கு, பிப்ரவரி 13, 2011 அன்று நடத்தப்பட்டது. இதில் ஆற்றல் மிக்க, ஆர்வமிக்க 15 இளைஞர்களைக் கொண்ட குழு, கலந்து கொண்டது. சகோ.ஆனந்த், இந்த பயிலரங்கின் பொருளில் உரையாற்றினார். இரு நபர்களுக்கிடையே கருத்து பரிமாற்றங்கள், சிறு குழுக்களிடையே ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள், ஒவ்வொருவருக்கும் தனி சிட்டிங், கூட்டு பிரார்த்தனை, ஒலி/ஒளி நிகழ்ச்சி மற்றும் இரவு உணவிற்கு பின் அழகிய படம், ஆகிய நிகழ்ச்சிகள், இளைஞர்களுக்கு களிப்பூட்டுபவையாக அமைந்தன.

பங்கேற்ற ஒவ்வொருவரும், தனக்குள் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க உள்முக மாறுதல்கள், தன்னுடைய வளர்ச்சியில் தன் ஈடுபாட்டை நன்கு புரிந்து கொள்ளுதல் மற்றும் தனது பரிணாம வளர்ச்சிக்கான உள்ளார்ந்த ஏக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தினர். நிகழ்ச்சி நிறைவுபெறும் நேரத்தில், அனைவரின் முகத்திலும் ஒரு மகிழ்ச்சி திகழ்வதையும் மற்றும் தனது பரிணாம வளர்ச்சியில், உள்முக பற்றுறுதியினையும் காண முடிந்தது. இவ்விரு நிகழ்ச்சிகளிலிருந்தும் பெறப்பட்ட கருத்துகள் வெளிப்படையாகவும், நன்றாகவும் இருந்தன. இவ்வாறான கூட்டங்களில் பங்கேற்க எதிர்பார்த்திருப்பதாக பலர் கூறினர்.





## புவனேஷ்வரில் சகோதரிகளின் புது முயற்சி

புவனேஷ்வர் மையத்தைச் சேர்ந்த அப்யாசி சகோதரிகள் அக்டோபர் 2010 முதல், மாதம் ஒருமுறை கூட்டம் நடத்த தொடங்கினர். இதுவரை அவர்கள் நான்கு கூட்டங்கள் நடத்தியுள்ளனர். மேலும் அதில் ஒரு பிரசெப்டர் சகோதரி இருப்பதையும் உறுதி செய்து கொண்டனர். அவர்கள் சகஜ மார்க்கத்திலுள்ள ஒரு முக்கிய அம்சத்தை எடுத்துக்கொண்டு, அவர்களின் கண்ணோட்டங்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டதுடன், தேவையின்போது பிரசெப்டரும் விளக்கங்களை வழங்கினார். முதல் நான்கு கூட்டங்களில் தியானம், சுத்திகரிப்பு, பிரார்த்தனை மற்றும் ஆசிரமம் ஆகிய தலைப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த மாதிரியான கலந்துரையாடல் கூட்டங்கள், சகோதரிகளின் மத்தியில் சாதனா பற்றிய பொதுவான கருத்துக்களை தெளிவுபடுத்திக் கொள்ள உதவுவதுடன், முழு ஆள் நிகழ்ச்சியாக நடைபெறும் கலந்துரையாடல்களில் ஊக்கத்துடன் பங்கேற்க, மெதுவே உதவிபுரிவதையும், கண்கூடாக பார்க்க முடிகிறது. சகோதரிகள், மையத்தின் சமையற்கூடத்தையும் மீண்டும் ஒழுங்குசெய்துள்ளதால், ஞாயிற்றுக்கிழமைகளில், சத்சங்கத்தைத் தொடர்ந்து, காலை உணவு வழங்கப்படுகிறது.

கடந்த மூன்று மாதங்களில், அனைத்து முழு நாள் நிகழ்ச்சிகளிலும், கலந்துரையாடல்களைத் தொடர்ந்து அப்யாசிகள் அனைவராலும் அரை மணி நேரம் மௌனம் கடைப்பிடிக்கப்படுகிறது. மையத்தில் வேலை செய்வது, புத்தகங்கள் படிப்பது அல்லது கண்களை திறந்து கொண்டு வெறுமனே அமர்ந்திருப்பது போன்ற சமயங்களில் அவர்கள் அவ்வாறு இருக்கின்றனர். இது நன்கு பயனளிப்பதால், தற்போது அப்யாசிகள் இந்த மௌனமாக இருக்கும் தருணத்தை எதிர்பார்க்கின்றனர்.

## டெய்லி ரிப்ளக்ஷன்ஸ் தொடர்பான புது முயற்சி

டெய்லி ரிப்ளக்ஷன்ஸ் என்பது, தினமும் நமது மிஷனால், மாஸ்டர்களின் மேற்கோள்களை மின்னஞ்சல் மூலம் பதிவு செய்துள்ளவர்களுக்கு இலவசமாக அனுப்பும் சேவை யாகும். இது பற்றி அப்யாசிகளின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, மத்திய பிரதேசத்தை சேர்ந்த விதிஷாவில் 17 ஜனவரி அன்று, ஒரு முழு நாள் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

25 நாட்கள் தொடர்ந்து, ஒரு அப்யாசிகள் குழு, மிஷன் இலக்கியங்களிலிருந்து எடுக்கப்பட்டு, இந்தியில் மொழி பெயர்க்கப்பட்ட தினம் ஒரு செய்தியைப் படித்தனர். ஒவ்வொரு அப்யாசிக்கும் ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டதுடன், அவர்கள் தன் உணர்வுகளையும் எண்ணங்களையும் ஆராயவும், அவர்களின் சாதனாவை மதிப்பிடவும், ஒழுக்கம் மற்றும் நடத்தை ஆகியவற்றை புரிந்து கொள்ளவும் மற்றும் அனைவருடனும் அவர்களின் எண்ணங்களை பகிர்ந்து கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்பட்டனர். மௌனத்தின் குரல், மௌனம், நேரம், உலகம், பதிவுகள், மிஷன், கடவுளை உணர்தல், நான், குழந்தைகள், மனம், ஆசிரமங்கள், எப்படி வேலை செய்வது, நமது சந்திப்பு, மதம் மற்றும் ஆன்மீகம், மற்றும் முன்னேற்றம் போன்ற பகுதிகளிலிருந்து தலைப்புக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. பங்கு பெற்ற சகோதர, சகோதரிகளின் செயல் உற்சாகத்தைத் தந்தது. மேலும் அது அவர்களுக்கு ஊக்கத்தை கூட்டியது. இந்த நிகழ்ச்சியானது, மையத்தை சேர்ந்த அப்யாசிகளுக்கு தினம் ஒரு செய்தி படிக்க வேண்டியதன் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

## அப்யாசி பயிற்சி நிகழ்ச்சி

அப்யாசி பயிற்சி நிகழ்ச்சிகள், இந்தியாவின் பல்வேறு மையங்களில் நடைபெற்றுவருகின்றன. இந்த நிகழ்ச்சியின் நோக்கம், சகஜ மார்க்க சாதனா பற்றிய நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அப்யாசிகளுக்கு அவர்களின் சாதனா பற்றிய சந்தேகங்களை தெளிவுபடுத்துவதுமாகும். இந்த நிகழ்ச்சியானது தியானம், சுத்திகரிப்பு, பத்து நியமங்கள், பிரார்த்தனை, நிலையான நினைவு ஆகியவை பற்றி விரிவான விளக்கங்களை வழங்குகிறது. விளக்கவுரைக்கு பின் நடைபெறும் கேள்வி-பதில் பகுதி அனைத்து சந்தேகங்களையும் தெளிவுபடுத்த உதவுகிறது. பின்வரும் மையங்களில் அப்யாசி பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன், அங்கு அப்யாசிகளிடமிருந்து வந்த பதில்கள் மிகுந்த உற்சாகத்தையும் அளித்தன. சரியான மனப்பான்மையுடன் அவர்களின் சாதனாவை பயிற்சி செய்ய இந்த நிகழ்ச்சிகள் உதவும் என்றும் மேலும் அவர்களின் சாதனாவை மிக ஒழுங்குடன் செய்ய வேண்டியதன் அவசியத்தை உணர்த்தியதென்றும் கூறினர். அவர்கள் அனைத்து அப்யாசிகளுக்கும் அவ்வப்போது புத்துணர்வு பயிற்சி வகுப்புக்கள் நடத்தப்பட வேண்டுமென்றும் கருத்து தெரிவித்தனர்.



வல்சத்



குல்பர்கா



ராய்சூர்



மும்பை

### வல்சத், குஜராத்

பாரூச், சூரத், நவ்சாரி, வாபி, சேர்கம், சில்லாபர்டி மற்றும் வல்சத் மையங்களிலிருந்து, இருபத்தி நான்கு அப்யாசிகள், வல்சத் ஆசிரமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சி குஜராத்தில் நடத்தப்பட்டது.

### குல்பர்கா, வட கர்நாடகா

ஜனவரி 2, 2011 அன்று சகோதரர் பிரகலாத் பக்நிக்கர், குல்பர்கா ஆசிரமத்தில் பயிற்சி நிகழ்ச்சியை நடத்தினார். அதில் நாற்பது அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

### ராய்சூர், வட கர்நாடகா

ராய்சூர் ஆசிரமத்தில் ஜனவரி 9, 2011 அன்று சகோதரர் பிரகலாத் பக்நிக்கர் மற்றும் சகோதரர் நிஜலிங்கப்பா சுமார் நாற்பது அப்யாசிகள் கலந்து கொண்ட நிகழ்ச்சியை நடத்தினர்.

### கார்கர், நவி மும்பை

சகோதரி நந்திதா மாதூர், பதினைந்து அப்யாசிகளுக்கு ஒரு அப்யாசி சகோதரியின் இல்லத்தில் நிகழ்ச்சியை நடத்தினார்.

### ஜோகேஸ்வரி, மும்பை

சகோதரி சுனிதா நடத்திய நிகழ்ச்சியில் பதினொரு அப்யாசிகள் கலந்து கொண்டனர்.

மார்ச் 2011 மலர் 4 இதழ் 2
ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®
எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# கட்டுரைப்போட்டி 2010 சான்றிதழ் வழங்குதல்


பரமக்குடி



அலகாபாத்


நகர்லகுன்

அடுத்த தலைமுறையினர் தங்கள் வாழ்க்கையின் ஒழுக்கம் மற்றும் நேர்மையின் அடித்தளம் பற்றி சிந்திக்கும்படி ஊக்குவிக்கவும், அவர்களின் இதயங்களில் சகஜ மார்க்க நன்னெறிகளான, அகிலமளாவிய அன்பு, சகோதரத்துவம் மற்றும் மனித ஒருங்கிணைப்பு ஆகியவை தனிமனித மாற்றம் மூலமாக ஏற்படுவதற்கான விதை விதைக்கவும், ஒவ்வொரு ஆண்டும், அகில இந்திய கட்டுரை எழுதும் போட்டி நடத்தப்படுகிறது. இந்த வருடம் சுமார்

5,00,000 இளைஞர்கள், 11,500க்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்களிலிருந்து, வயதின் அடிப்படையில் மூன்று பிரிவுகளாக, கீழ்வரும் தலைப்புகளில் கட்டுரைகளை எழுதினர்.

- ❖ நற்பண்புகள் வாழ்க்கையைப் பாதுகாக்கும்
- ❖ சுதந்திரம் என்பது உரிமம் அல்ல, அது எது சரியென்று தேர்வு செய்யும் ஞானம் ஆகும்
- ❖ ஆசையிலிருந்து குறிக்கோள், பெற்றுக்கொள்வதிலிருந்து அவற்றிற்கு தகுதியுடைவராக மாறுவது

கட்டுரைகள் மதிப்பிடப்பட்டு எழுதியவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்க மையம் வாரியாக பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பட்டதுடன் அந்நிகழ்ச்சிக்கு அவர்களின் பெற்றோர்களும் மற்றும் ஆசிரியர்கள்/விரிவுரையாளர்களும் கலந்து கொள்ள வரவேற்கப்பட்டனர்.

## மத்திய பிரதேசம்

ஒரு அறிமுக கூட்டத்துடன், வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நிகழ்ச்சி, ஒரே மாதிரியாக மத்திய பிரதேசத்திலுள்ள அனைத்து மையங்களிலும் நடத்தப்பட்டது. பரிசளிப்பு நிகழ்ச்சியை தொடர்ந்து, "வாழ்வில் நன்னெறிகளின் முக்கியத்துவம்" என்ற தலைப்பில் சிற்றுரை நிகழ்த்தப்பட்டது. விழாவின் முடிவில், நமது மிஷன் மற்றும் ஆன்மீகம் குறித்து ஒரு சிறு அறிமுகம் கொடுக்கப்பட்டது. இதன் விளைவாக, பல பங்கேற்பாளர்கள் மிஷனில் சேருவதற்கு ஆர்வம் காட்டினர்.

## அருணாச்சல பிரதேசம்

வட கிழக்கு மாநிலங்களில், அருணாச்சல பிரதேசம், ஷில்லாங்(மேகாலயா), இம்பால் மற்றும்

C.C.பூர்(மணிப்பூர்) ஆகியவற்றிலிருந்து, ஐம்பத்து மூன்று கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 350 மாணவர்கள் பங்கேற்றதைக் காண முடிந்தது. 30 ஜனவரி அன்று நகர்லகுன் ஆசிரமத்தில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், சுமார் 150 பங்கேற்பாளர்கள் பங்கு பெற்றனர். மண்டலம் மற்றும் பள்ளி அளவில் வெற்றி பெற்றவர்களுக்கு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஒலி ஒளி வடிவில் மாஸ்டரின் செய்தி, (இளைஞர்களுக்கான செய்தி, 16 அக்டோபர் 2009, துபாய்) காண்பிக்கப்பட்டது. மண்டல அளவில் வெற்றி பெற்றவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்துகொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

## தமிழ்நாடு

முதல் நிகழ்ச்சி, கூடலூரிலுள்ள புனித தாமஸ் ஆங்கில வழி உயர்நிலை பள்ளியில், பிப்ரவரி 5 ஆம் தேதி நடத்தப்பட்டது. வெகு தொலைவிலிருக்கும் கூடலூர் கிராமத்தில், இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டமைக்கு பங்கேற்பாளர்கள் பாராட்டுதலை தெரிவித்தனர்.

6 ஆம் தேதி அன்று, ஊட்டி மையத்தில் நடந்த நிகழ்ச்சியில், சுமார் 100 பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். இந்த இரண்டு தருணங்களிலும், சகோதரர். விஸ்வநாதா (மண்டல பொறுப்பாளர்) மற்றும் சகோ. M.M.தாணுமூர்த்தி, சகஜ மார்க்கம் பற்றி உரை ஆற்றினர். வெற்றி பெற்றவர்களில் சிலரும், மற்றும் சில பள்ளிகளின் முதல்வர்களும், தங்களது கருத்துக்களையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

பிப்ரவரி 13ஆம் தேதி, அவிநாசி மற்றும் புளியம்பட்டியிலிருக்கும் இருபது பள்ளிகளை சேர்ந்த இருபது வெற்றியாளர்களுக்கு, அவிநாசி ஆசிரமத்தில் பாராட்டு விழா நடத்தப்பட்டது. சுமார் அறுபது விருந்தினர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். சகோ. T.V.விஸ்வநாதா இம்மாதிரியான கட்டுரை போட்டிகள் மூலம், மாணவர்களிடத்தில் குணநலன்களை வளர்ப்பதற்காக, மிஷன் மேற்கொள்ளும் முயற்சிகள் பற்றி உரை ஆற்றினார். சகோதரர். சேஷ மணிகண்டன், இன்றைய மன அழுத்தம் வாய்ந்த உலகில், தியானத்தின் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

பிப்ரவரி 6 அன்று, பரமக்குடி மையத்தில் நடைபெற்ற போட்டியில் ஒன்பது பள்ளிகள் மற்றும் இரண்டு கல்லூரிகளிலிருந்து பங்கேற்றவர்களில், மொத்தமாக பதினான்கு மாணவர்கள் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றனர்.

சகோ. கண்ணன் மற்றும் சகோ. முருகன், ஒருவரின் குணம், ஒழுக்க மேம்பாடு பற்றிய ஆழ்ந்த அறிவை தருவதற்கு இந்த கட்டுரை போட்டியின் பங்கினை விளக்கமாக எடுத்து கூறினர். சகஜ மார்க்க சாதனா மற்றும் அதனால் பௌதீக மற்றும் ஆன்மீக வாழ்க்கையில் ஏற்படும் அனுகூலம் பற்றிய உரைகள் இடம் பெற்றன. பங்கேற்ற ஆசிரியர்களுக்கு, சகஜ மார்க்க இலக்கியங்களிலிருந்து புத்தகங்கள் வழங்கப்பட்டன. மேலும் சில ஆசிரியர்களும் வெற்றியாளர்களும் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

## ஆந்திர ப்பிரதேசம்

பிப்ரவரி6 ம் தேதியன்று, பல்வேறு கல்வி நிலையங்களின், மாணவர்கள், பெற்றோர், முதல்வர்கள், பேராசியர்கள், விரிவுரையாளர்கள் உட்பட மொத்தம் 500 பேர்,



ஊட்டி


அவிநாசி


இந்தூர்



தீன்சுகியா


ஹைதராபாத்


ராஞ்சி

விசாகபட்டினம் ஆசிரமத்தில் நடந்த விழாவிற்கு வருகை புரிந்தனர். சுமார் 10000 மாணவர்கள் போட்டியிட்டனர்.

160 பேர் அதிலிருந்து வெற்றி பெற்றனர். மையப்பொறுப்பாளர் கோபால் ராவ், பிரசெப்டர் V.R.S.N. சர்மா, சகோ. P.V.G.K.மூர்த்தி முதலியோர், ஆன்மீக வாழ்க்கையின் அவசியம், மக்களிடையே ஆன்மீக விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவது, நற்பண்புகளை வளர்த்துக்கொள்வது, மனிதப்பண்பு, மற்றும் நன்நெறி சார்ந்த கல்வி முறை பற்றி உரையாற்றினர். இம்மண்டலத்திலிருந்து, 9 மாணவர்கள் தேசிய அளவிலும் வெற்றி பெற்றனர்.

ஹைதராபாத், தூமகுண்டா மண்டல ஆசிரமத்தில் இந்நிகழ்ச்சி, பிப்ரவரி 6ம் தேதியன்று நடத்தப்பட்டது. 250 கல்வி நிலையங்களிலிருந்து சுமார் 4000 மாணவர்கள் இப்போட்டியில் கலந்து கொண்டனர். சகோதரி மதுமதி உரையாற்றினார். மண்டலப்பொறுப்பாளர் சகோ. ஆனந்த், மையப்பொறுப்பாளர் சகோ. ஸ்ரீநிவாசராவ், மற்றும் U.N. னின்

Dr. கமல் ராஜ் ஆகியோர் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினர். பள்ளி, மண்டலம் மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்றவர்கள் இதில் கலந்து கொண்டனர். கீதாஞ்சலிதேவஷ்ரை பள்ளியின் மாணவர், திரு. நவநீதகிருஷ்ணன், தேசிய அளவில், முதல் பிரிவில், இரண்டாவது பரிசை(2nd runner-up)வென்றார். சகஜ மார்க்கத்தைப் பற்றிய விளக்கங்கள் கேட்டுவரும் விருந்தினருக்கு, விளக்கமளிக்க,வரவேற்புக்குழு நாள் முழுவதும் பணியாற்றியது.

## ராஞ்சி

ராஞ்சியின் ரோட்டரிகூடத்தில், ஜார்கண்ட் மையப்பல்கலைகழகத்தின் தாளாளர்,

Dr.ஷ்யாம் நாராயண் முக்கிய விருந்தினராக பங்கேற்று, மண்டல அளவில் வெற்றி பெற்ற30 மாணவர்களுக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கினார். சகோ.மனோஜ் திவாரி இக்கட்டுரைப்போட்டியின் நோக்கத்தை எடுத்துரைத்தார். பல பள்ளிகளிலிருந்து பங்கேற்ற மாணவர்கள், இப்போட்டிக்கு எவ்விதம் தாங்கள் தயார் படுத்திக்கொண்டனர் என்பதையும், அது எவ்விதம் வாழ்க்கை பயணத்தையும் குறிக்கோளையும் பற்றிய தங்கள் கருத்தை மாற்றியது என்பதையும் பகிர்ந்து கொண்டனர்.

முக்கிய விருந்தினர், எவ்விதம் நற்பண்புகள் நம் வாழ்க்கைக்கு அரணாக உள்ளது என்பதை பற்றியும் உண்மையான சுதந்திரம் எது, அதன் தாக்கம் எவ்விதம் அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதைப்பற்றியும் விவரித்தார். ஒரு மாணவனின் தாய், சகோதரி ஷஷி, மிஷனின் வேலைகளை புகழ்ந்தார். ஆசிரியரான திரு. அலோக் மிஷனுக்கு நன்றி கூறினார்.

## அஸ்ஸாம்

அஸ்ஸாம், கௌஹாத்தி விழாவில் 84 மாணவர்களும், பெற்றோர், மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். மையப்பொறுப்பாளர் சகோ. பரிஜித் புகான் மிஷனைப்பற்றி முகவுரையாற்றினார். சகோ. அசோக் சென்குப்தா மனஒழுக்கத்தைப்பற்றியும், இதயம் மீதான தியானத்தின் முக்கியத்துவத்தைப்பற்றியும் எடுத்துரைத்தார். உலகளாவிய சகோதரத்துவத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, U.N.மற்றும் SRCM ஒருங்கிணைவதை அவர் குறிப்பிட்டுக் காட்டினார்.மற்றும் நன்நெறி அடிப்படைக் கல்வியின் செயல்பாடுகளையும் விளக்கினார். அது, மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களை, தியானம் மற்றும் ஆன்மீகம் மீது ஆழ்ந்த ஈடுபாடு கொள்ள ஊக்குவித்தது.

மதிய உணவின் போது, விருந்தினரின் கேள்விகளுக்கும், சந்தேகங்களுக்கும் பிரசெப்டர்களும், மூத்த அப்யாசிகளும் விளக்கமளித்தனர்.

தீன்சுகியா ஆசிரமத்தில், பிப்ரவரி 2ம் தேதியன்று, சுமார் 60 மாணவர்கள், பள்ளி முதல்வர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் விழாவில் கலந்து கொண்டனர். மிஷனைப்பற்றியும், அதன் உலகளாவிய பணிகளைப்பற்றியும் மையப்பொறுப்பாளர் சகோ. கைலாஷ் அகர்வாலும், கௌஹாத்தி மையத்தின் சகோ. அசோக் சென்குப்தாவும் விவரித்துக்கூறினர். ஒரு மாணவனின் வாழ்வில் தியானத்தின் முக்கியத்துவத்தை பற்றியும், நன்நெறி சார்ந்த கல்விமுறையின் நடைமுறை பயிற்சி பற்றியும் விளக்கமளித்தனர். அது பார்வையாளர்களை ஊக்குவித்தது.

## மேற்கு வங்கம்

ஜனவரி 23ம் தேதி, கொல்கத்தா பாபூஜி நினைவு ஆசிரமத்தில் விழா நடத்தப்பட்டது. பவானிபூர் குஜராத் கல்வி கழகத்தின் தலைவரும், கல்வியாளரும், வள்ளலுமான மங்கள் சிங்வி முக்கிய விருந்தினராகவும், டைம்ஸ் ஆஃப் இந்தியாவின் உதவி உள்ளுறை பதிப்பாசிரியர் திரு. கேசவ் பிரதான் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர். இவ்வருடம் 45க்கும் மேற்பட்ட கல்வி நிலையங்கள், கொல்கத்தா மட்டுமின்றி, டார்ஜிலிங், சிலிகுரி, ராணிகஞ்ஜ் போன்ற இடங்களிலிருந்தும் மண்டல அளவில் கலந்து கொண்டன.

முக்கிய விருந்தினர் மற்றும் திரு. கேசவ் பிரதான் வழங்கிய, சிந்தனையைத் தூண்டும்வண்ணம் அமைந்த சொற்பொழிவுகளை, விழாவிற்கு வந்திருந்த 50க்கும் மேற்பட்ட பரிசு பெற்ற மாணவர்கள், 80 பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் கேட்டு ரசித்தனர். இதையடுத்துப்பேசிய சகோ.ரிஷப் கோத்தாரி, SRCM-UNனின் கூட்டுமுயற்சி, மற்றும் அவற்றின் பொதுவான குறிக்கோள்கள் பற்றி சில வார்த்தைகள் கூறினார். தேசிய அளவில் வெற்றிபெற்றவர்களில், லொரெடோஹவுஸைச் சேர்ந்த ஹுயுஷா கனெரிவால்(முதல் பரிசு, முதல் பிரிவு),மற்றும் இப்சிதா தாஸ்குப்தா(இரண்டாம் பரிசு, இரண்டாம் பிரிவு) ஆகிய இருவர், கொல்கத்தாவைச் சேர்ந்தவர்கள் ஆதலால், இம்மண்டலத்தின் மகிழ்ச்சி அதிகரித்தது. வெற்றிபெற்ற அனைவருக்கும் சான்றிதழ்களுடன்,

'Youth;A time of promise and for effort' என்ற புத்தகமும் அளிக்கப்பட்டது.

ஆசிரமத்தின் அமைதியான சூழ்நிலை எல்லோருடைய உள்ளுணர்வுத்திறனையும் அதிகரித்தது. மிஷனைப்பற்றியும், அதன் பணிகளைப்பற்றியும் அறிய பலர் ஆர்வம் காட்டினர். புத்தக விற்பனப்பிரிவில் பலர் புத்தகங்களை அலசிப்பார்த்தது மட்டுமின்றி, எவ்விதம் பயிற்சி முறை ஆரம்பிப்பது என அறிய ஆர்வமுற்றனர்.

மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்களின் முக மலர்ச்சியை கண்ணுற்ற போது, அவர்கள் பரிசுகளும் கௌரவமும் கொண்டு செல்வதோடுமட்டுமின்றி, அவர்களின் இதயங்களில் ஆழமாக அன்பு பதிக்கப்பெற்றதும் தெரிந்தது. கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.

CENTRE OF LIGHT

மார்ச் 2011 மலர் 4 இதழ் 2

ஸ்ரீ ராம் சந்த்ர மிஷன்®

எக்கோஸ் இந்தியா செய்திமடல்

# ஜெய்பூர், மண்டல ஆசிரமம்







புகழ்வாய்ந்த ராஜஸ்தானின் தலைநகரமான, ஜெய்பூரில் உள்ள ஆசிரமம், ராஜஸ்தானின் மண்டல ஆசிரமம் ஆகும். ஜெய்பூர் - அஜ்மீர் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த ஆசிரமம், நகரத்தின் மையத்திலிருந்து 19 கி.மீ. தூரத்திலும், விமானநிலையத்திலிருந்து 23 கி.மீ. தூரத்திலும் உள்ளது. ஆகஸ்ட் 2002 வாங்கப்பட்ட, 10 ஏக்கர் நிலத்தில் இது அமைந்துள்ளது. இதன் அருகில் 21 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள 'மாஸ்டர் க்ரியேஷன்' என்ற ஒரு அப்யாசி காலனி உள்ளது.

அக்டோபர் 27, 2002 அன்று, மாஸ்டர் அந்த இடத்திற்கு வருகை புரிந்தபோது, ஒருதியான கூடம், சமையலறை, அலுவலகம், மற்றும் மாஸ்டரின் குடில் ஆகியவை கொண்ட ஒரு மூங்கிலால் ஆன ஒரு அமைப்பு இருந்தது. அதையடுத்து, மாஸ்டர் பலதடவை வருகை புரிந்தபோது, கட்டிடம் மற்றும் குடியிருப்பு வளாகம் போன்றவைகளின் திட்டங்கள் உருவாக உதவிபுரிந்தார். அவரது இயக்கத்தின் கீழ், ராஜஸ்தானின் கட்டிடக்கலை பாணியில் ஆசிரமம் கட்டப்பட்டது.

17, மே 2009ல், மாஸ்டர் அடிக்கல் நாட்டியபிறகு, அப்யாசி தன்னார்வத்தொண்டர்களின் உற்சாகம் மிகுந்த பங்கேற்பால், 15 மாதங்களுக்குள், கட்டிடவேலை நிறைவடைந்தது. 2010 ஜூலை 30ந் தேதி, ராஜஸ்தானம் மற்ற அண்டை மாநிலங்களைச்சேர்ந்த அப்யாசிகள் பங்கேற்ற ஒருவிழாவில், மாஸ்டர் தம் குருவான பூஜ்ய பாபூஜி மகராஜ் அவர்களுக்கு, இந்த மண்டல ஆசிரமத்தை அர்ப்பணித்தார். அடுத்த நாள் அவர், தம் உரையில், ராஜஸ்தான் தனக்குவிருப்பமான இடங்களில் ஒன்றாகும் ஒன்று கூறினார். சரணடைதல் இருக்கும்போது, இயற்கையின் அனைத்து ஆசிகளும் நம்முடன் இருக்கும் என்பதை வெளிப்படுத்தினார்.

10000 ச.அடியில் ஒரு தியானகூடமும், 6300ச.அடியில் மாஸ்டரின் அலுவலக அறையும் கொண்டுள்ள இந்த ஆசிரமம், மிகச்சிறந்த முறையில் திட்டமிடப்பட்டுள்ளது. 300 அப்யாசிகளுக்கும் மேல் தங்கக்கூடிய விடுதிகளும், அடித்தளத்தில் அலுவலகங்களும் உள்ளன. பலவிதமான மரங்கள், செடிகளைக் கொண்ட அழகான இயற்கைச்சூழல், ஆசிரமம் முழுவதிலும் உள்ளது.

ஆசிரமத்தின், அமைதியான தெய்வீகச் சூழல், அப்யாசிகளின் செயல்பாடுகளை அதிகப்படுத்துகிறது. பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகள், விபிஎஸ்இ செயல்பாடுகள், கட்டுரைப் போட்டிகள், குழந்தைகள், இளைஞர் செயல்பாடுகள், வரவேற்புக்கூட்டங்கள் மற்றும் குழுகலந்துரையாடல்கள் ஆகியவை வருடம்முழுவதும் நடைபெற்று வருகின்றன.

அப்யாசிகள் மிஷனுக்காகப் பணிபுரிந்து, மாஸ்டர் விரும்பும் வழியில் தங்களை வளர்த்துக் கொள்ள, ஒரு வாய்ப்பை இந்த ஒளிமையம் வழங்குவது, மாஸ்டரின் அருளாலேயேஆகும்.














**To download or subscribe to this newsletter, please visit http://www.sahajmarg.org/newsletter/india For feedback, suggestions and news articles please send email to in.newsletter@srcm.org**

© 2011 Shri Ram Chandra Mission ("SRCM"). All rights reserved. "Shri Ram Chandra Mission", "Sahaj Marg", "SRCM", "Constant Remembrance" and the Mission's Emblem are registered Trademarks of Shri Ram Chandra Mission.This Newsletter is intended exclusively for the members of SRCM. The views expressed in the various articles are provided by various volunteers and are not necessarily those of SRCM.